பிஸ்மில்லாஹ்.

[illegible]

கீழக்கரை

கல்வத்து நாயகமவர்கள்

# இன்னிசைப் பாமாலை.

ஆக்கியோர்,


**கா. ப. செய்குதம்பிப் பாவலர்,**

கோட்டாறு.



பதித்தது,

எம். எஸ். எம். பிரஸ்,

நாகர்கோவில்.

1940.

# சாற்றுகவிகள்.

இது
இந்நூலாசிரியரின்
மாணாக்கர்களுள் ஒருவரான
தேங்கம்புதூர், தமிழ்ப்பண்டிதர்
தா, சாத்தான் குட்டிப்பிள்ளை
அவர்களியற்றியது.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆவடுத்த முல்லைநிலத் தாய்ச்சியர்கைத்
தயிர்பால்நெய் யள்ளி யள்ளி
மாவடுத்த முக்கனித்தேன் மடைபுரளத்
தடநிறைய மல்கி யோடி
பூவடுத்த குறுமபணிலத் தொளிமணிசேர்
களிமணில முயமப் பாய்ந்து
கோவடுத்த பயிர்வளர்த்தும் வளவயல்சேர்
கோட்டாறார் கோட்டாற் றாரே. 1

ஆற்றுதவப் பேறனைத்து மனுதினமு
மோருருவாய் யமைந்தா லொத்துத்
தோற்றுதவம் படைத்துயர்ந்த தொல்குலத்தான்
பல்புகழான் தூய வாய்மை
சாற்றுதவ நெறியுடையான் கதியுடையான்
மதியுடையான சார்ந்தோர்ப் போற்றி
ஏற்றுதவ வாய்ந்தசெழு மிருங்குணத்தா
னரும்பொறையா னினிய வாழ்வான். 2

எந்நாலும் பாடியபின் னியற்றுகென
முன்னோர்க ளிசைத்துப் போந்த
இன்னிசையைந் திணைக்கோவை யிரண்டந்தா
னந்தாதி மாலை யாதிப்

பன்னூலு மினிதுரைத்தான் பகர்சீரு
வுரைவகுத்தான் பலரும் போற்ற
உன்னரிய வவதான மொருநூறு
மையமற வுரணச் செய்தான். 3

சீரேறு பகீர்மீரான் செய்தவமுந்
தமிழுணங்கின் செய்ய பேறும்
நீரேறு புவியினிடை நேர்ந்துதித்தாற்
போன்றெழுந்து நிலவ நின்றான்
பாரேறு புகழ்படைத்தான் பான்மைமிகு
மருணலத்தான் பலன்சேர் வாகைத்
தாரேறு துணைப்புயத்தான் செய்குதம்பிப்
பாவலப்போ சாற்ற வாய்ந்தான். 4

மன்னுதவ நெறியன்றி வாய்மைநெறி
யில்லையென மனத்தி னுய்ந்து
பன்னுபொருள் பிறவுமுற பழுதருத்தும்
நெறியொழித்துப் பகரு மேலோர்
மன்னுமிரு சரணரணு மதிக்குமெழிற்
கல்வத்து மகிபன் றுட்கோர்
இன்னிசைப்பா மாலையென வியற்றமிழ்நா
லொன்றியற்றி யிசைபெற் றுனல். 5

எள்ளரிய பயனிலவு மிப்பெருநூற்
கவியொன்றை யினிது கற்றோர்
தள்ளரிய முத்தமிழ்நூல் தகைமையுமுழு
துணர்ந்தவராய்ச் சார்வ தல்லால்
விள்ளரிய பொருளறிவு விளக்கமுறச்
சுகமனைத்து மேவப் பெற்றுக்
கொள்ளரிய தவத்துறையின் கோளுணர்ந்து
மெய்ம்மைநலங் கொண்டுய் வாரே. 6

இது
இந்நூலாசிரியரின்
மாணுக்கர்களுள் ஒருவரான
பறக்கை தமிழ் வித்துவான்
தா, மாணிக்கவாசகம் பிள்ளை
அவாகளியற்றியது.

## கொச்சகக் கலிப்பா.

பூவிருக்கும் பல்வளனும் பூண்டிருக்கப் போந்தமறை
நாவிருக்கும் வாணர்குழாம நாடுமெய்ச்ச மாதிநிலைக்
கோவிருக்கும புந்திமன மேய்ந்திருந்த வுத்தமர்வாழ்
தாவிருக்குங் கிழைநகர் சார்ந்தசல்வந் தாண்டவைகமேல். (1)

பொன்னிசையும் பின்னிசையப் போந்தொளிப்பப் புத்தமிழ்த
மென்னிசையும் பூங்கரும்பே டின்பமிகு பால்சனிதேன்
முன்னிசைய வல்லவல்ல முதலகி லென்னுவத்தற்
கின்னிசைப்பா மாலைதொடுத தெற்றமிகச் சூட்டினனுல். (2)

அன்னவனூர் கோடைநக ராற்றுதவப் பேறனைத்து
மன்னவரு மொருநவாய் வாய்ப்பவரு மாமதியான்
பின்னவரு முன்னவரும பேசவதா னச்செயலே
பன்னவரு நாறிசைப்போன் பாருலகுக் கோர்தீபம. (3)

மாசகத்தி னீதறெமக்கிம் மாசகத்தி னுற்றசலே
சூசகத்தி னூட்டுகிற்போன் சூழ்ந்ததிரி னையமற
வாசகத்தி னூட்கொள்வோன் வாசமிகு மெய்ந்நவைதிற்
பேசகத்தி யற்குமிக்கான் பீடுபெறு பெற்றியுள்ளான. (4)

எண்டிசையும் வான்புவியும் ஏற்றமிகு பாதலமுங்
கண்டிசையும் மெய்ப்புகழான் காட்சிமிகு நற்கதியான்
பண்டிசையு முகதர்குலப் பானுசெய்கு தம்பியெனக்
கொண்டிசையும் பாவலப்பேர் கூர்த்தமதி வாணனம்மா. (5)

இது
இந்நூலாசிரியரின்
மாணாக்கர்களுள் ஒருவரான
கோட்டாரம்
ஆர், ஏ, பிரம்மநாயகம் பிள்ளை
அவர்களியற்றியது.

---

## ஆசிரியப்பா.

உலக முவப்ப வொருதனிப் புகழா
லலகிலா விளையாட் டற்புதம் புரியக்
காவி முகையைக் களிவண் டினங்க
டாவிக் குடைய தண்பணை முழுதுஞ்
செந்தே னலைப்பத் தேமாஞ் சோலை
வந்தோர்க் கினிய மாங்கனி யுதவும்
ஆன்றோர் மாறு தவதரிக் கின்ற
வான்றோய் மாட வனப்பார் கீழக்
கரைதனி லுதித்துக் கலைபல தெளிந்தே
யுரைபட வளர்ந்தே யொழுக்க மாதிகள்
யாவு மொருங்கே யியல்பாய்த் திகைய
மூவகை மலமு முனிந்த கல்வத்து
நாயக னிணைமலர் நாளும் விரும்பி
ஏயகக் கனிவா லின்னிசைப் பாவால்
மாலைபொன் றன்பாய் மலைமண் டலத்து
சாலிக் குலைபடு தாளக் குவியலை
வாரிக் கொடுத்து வறுமை நீக்கும்
சீரிய தொழிலையே செய்வோ ருறையும்

[library stamp]

நாஞ்சில் வளனா டெனுநா டதனில்
தீஞ்சொல் வாணர் திறைகொணர்ந் திறைஞ்
அன்பே யுருவா யமைந்த பெரும
எம்போன் றாரி னிதயமா நாட்டை
யொக்கச் செங்கோ லோச்சியா ளரசே
தக்க பொறையுஞ் சான்ற வீரமும்
எங்கே பெற்று மிசையெனுந் தகுவை
யிங்கே நட்டுநீ யிருந்தமி ழுலகில்
எட்டுத் தொகையைந் திலக்கண மோடு
பத்துப் பாட்டும் பதினெண் கணக்குடன்
சங்க மரீஇய தமிழ்நூல் முற்றும்
இங்கித முடனே கற்போர்க் கிதமாய்
ஐயந் திரிபற வார்மாய்ப் பயிற்றும்
மெய்யன் புடைய வித்வசி காமணி
எல்லையில் பண்பிற் கிருப்பிட மானோய்
தொல்லைநூற் கடலிற் றுளைந்த களிறே
யென்றுரை செய்து வுலகலும் போற்றும்
பொன்றாப் புகழுரை செவிமடுத் திருக்கும்
கோட்டா றுடைய கொழுங்கவி வள்ளல்
கேட்டார் செவியும் வேட்டார் மனமும்
கனிய யாத்துச் சூடினன் கருதித்
தினமு மோதுவார் தீதறச் சதாவ
தானச் செய்கு தம்பிநல்
ஞானக் கடலெனும் நாவல ரேறே.

இது
இந்நூலாசிரியரின்
மாணாக்கர்களுள் ஒருவரான
கோட்டாறு
**சி. சரவண ஆச்சாரி**
அவர்களியற்றியது.

---

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

விண்படைத்த புகழ்படைத்து விளக்கமிகு
கீழைநகர் மிளிர்ந்தெ னாது
கண்படைத்த மணிபோலுங் கல்வத்து
நாயகர்தங் கமலத் தாட்கோர்
பண்படைத்த வின்னிசையிற் பாமாலை
சூட்டியருட் பரிசே பெற்றான்
திண்படைத்த எங்கள்குரு செய்குதம்பிப்
பாவலனாஞ் செம்மலம்மா.

---

**சாற்று கவி,**
முற்றிற்று.

# கீழக்கரைக்
# கல்வத்து நாயகமவர்கள்
# இன்னிசைப் பாமாலை.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

செல்வத்துட் செல்வமெனச் சீர்கெழுகீ ழக்கரைவாழ்
கல்வத்து நாயகத்தின் கண்ணியமே—பல்விதத்து
மல்கவரு மின்னிசைப்பா மாலைசொல வாய்ந்தவருள்
நல்கவரு மென்னிறையோ னட்பு. (1)

### கோச்சகக் கலிப்பா.

அற்பூர நும்மடிக்கே யஞ்சலித்த நெஞ்சினொடு
பொற்பூர வின்னிசைப்பாப் பூட்டிமகி ழீட்டேனோ
இற்பூர வன்பருளத் தேற்றிவைத்துப் போற்றுமொரு
கற்பூரத் தீபமொத்த கல்வத்து நாயகமே. (2)

விண்கண்ட வாதவன்போல் மேதினியெ லாம்விளக்கிப்
பண்கண்ட நும்மருட்சீர் பாவியேன் பாடேனோ
திண்கண்ட வாய்மைமிகு செய்யிதப்துல் காதிறெனுங்
கண்கண்ட சற்குருவே கல்வத்து நாயகமே. (3)

பூவிருந்த வாசமெனப் பூதலத்து மீதலத்து
மேவிருந்த நாதனருண் மேன்மைமிகு மேலோராய்த்
தூவிருந்த முத்தர்குலச் சுத்தபர தத்துவரே
காவிருந்த கீழைநகர் கல்வத்து நாயகமே. (4)

கேடுமுறித் தற்பகலுங் கீழ்மைதரு பேழமையாம்
பாடுமுறித் தூற்றமலைப் பற்றுமுறித் தாளீரோ
வாடுமுறித் தோங்குசிதகீக் மாமரபில் வந்தபெருங்
காடுமுறித் தார்குலததீர் கல்வத்து நாயகமே. (5)

ஆரணமும் பல்கலையு மாய்ந்துரைத்த வான்மீகப்
பூரணமெய்ஞ் ஞானதலைப் போதனைக ளத்தனையுஞ்
சீரணமுன் றோந்துணர்ந்த செலவருமச் செல்வர்தரு
காரணமு நானென்றீர் கல்வத்து நாயகமே. (6)

ஆட்டிவைத்த பம்பரம்போ லல்லலுழந் தற்பகலுங்
கோட்டிவைத்த வையமுற்றுங் கூர்ந்துவப்ப நேர்ந்தறிஞர்
தீட்டிவைத்த பல்கலையிற் செய்தொழிலில் வாய்மொழியிற்
காட்டிவைத்த பொக்கிஷமே கல்வத்து நாயகமே. (7)

சத்திருந்த ஞானகலை சாத்திரங்கள் யாவுமுமை
யொத்திருந்து தேடிமிக வோலமிடு முத்தமரே
பித்திருந்த வேழையனைப் பின்னலறுத் துன்னுமுன்னு
கத்திருந்த வந்தருள்வீர் கல்வத்து நாயகமே. (8)

மட்டற்ற செல்வமொடு மக்கள்மனை சுற்றமெலா
முட்டற்ற வாழ்க்கைமிக முன்னிருந்தும் பின்னொருவ
விட்டற்ற மோக்கநிலை மேவுதுற வேய்ந்துமனக்
கட்டற்ற நீர்மைகொண்டீர் கல்வத்து நாயகமே. (9)

வானாடும் பூநாடு மற்றனவுந் தானாட
நானாடு நும்மருட்டேன் நாயேனுண் டுய்யேனோ
ஊனாடு மாந்தரெலா முண்ணாட முன்னாடுங்
கானாடும் பூம்பதத்தீர் கல்வத்து நாயகமே. (10)

பேணுவது நும்மருளே பேசுவது நுந்நாமம்
பூணுவது நும்மலர்த்தாள் போற்றுவது நும்புகழே
காணுவது நும்மறதி நண்ணுவது நுஞ்சமுகங்
காணுவது நுங்காட்சி கல்வத்து நாயகமே. (11)

என்னாசை யொன்றுளதே தின்பமிகு செம்பொனடி
தன்னாசை யன்றியுநந் தண்ணருட்கீழ் வாழ்வதுவே
பின்னாசை யேதுமிலைப் பேதுறுத்தித் தீக்ருத்துங்
கன்னாசை நீத்தருள்வீர் கல்வத்து நாயகமே. (12)

ஆட்சிதரும் புந்திமன மாக்கையிந்தி யங்களெலாம்
நீட்சிதரு நுண்ணறிவால் நேர்ந்தொழித்தென் முன்பணிபோன்
மாட்சிதரு நீனா மாற்றமறுத் தைக்கியமெய்க்
காட்சிதருங் கண்ணுதலெங் கல்வத்து நாயகமே. (13)

மானாரும் பெற்றுவந்த மக்களொடு சுற்றமென
ஆனாரு நம்முயிர்க்கிங் காயதுணை யாவாரோ
தானாருஞ் சீவமுத்த தத்துவருஞ் சாற்றவல்ல
கானாரும் பூங்கழலீர் கல்வத்து நாயகமே. (14)

முட்குடியை நச்சுணவை முந்நீரை யுற்றருந்த
மட்குடிக ளெண்ணாத வாறென்னை நண்ணீரோ
உட்குடியா வீற்றிருந்தென் னுச்சிகனிந் தூறிவருங்
கட்குடியைக் காட்டுமெங்கள் கல்வத்து நாயகமே. (15)

பொய்கண்ட நுண்ணிடையார் பூட்டுமைய லார்கலியுள்
நொய்கண்ட நாயேனும் நொந்தழுந்தி மூழ்குவனோ
எய்கண்ட மாந்தருள தின்னறவீர்த் தின்பநல்குங்
கைகண்ட மாமருந்தே கல்வத்து நாயகமே. (16)

மண்ணாடிப் பெண்ணாடி மாநிதியந் தானாடிப்
புண்ணாடி நின்றநெஞ்சப் புல்லனையு மாளீரோ
உண்ணாடி வந்தவெலா முற்றுணர்ந்து மற்றுரைத்துங்
கண்ணாடி யானீரென் கல்வத்து நாயகமே. (17)

பண்ணாறு மென்மொழியார் பார்வைவலைக் குள்ளாகிப்
புண்ணாறு நெஞ்சினனாய்ப் புத்திகெட்டுப் போகாமற்
றண்ணாறு நுங்கருணைச் சாகரத்துண் மூழ்கவென்றன்
கண்ணாறு தீர்த்தருள்வீர் கல்வத்து நாயகமே. (18)

வேல்பிடித்த கண்மடவார் வெய்யமையற் காட்டகத்தே
மால்பிடித்த யானையென மாழாந்து நில்லாமற்
கோல்பிடித்த கையுடைய கொற்றவருங் காண்பருநுங்
கால்பிடித்தேன் கண்ணில்வைத்தேன் கல்வத்து நாயகமே. (19)

கொக்கிவிட்ட சங்கிலிபோற் கூண்டெழுந்து நும்மடியார்
சொக்கிவிட்ட நல்லருட்கே தோய்ந்துநின்று ஐயோநா
னுக்கிவிட்ட நெஞ்சினனா யுள்ளுடைந்து மெய்ம்மயங்கிக்
கக்கிவிட்ட தம்பலொத்தேன் கல்வத்து நாயகமே. (20)

ஆணவத்தை மற்றிரண்டை யாங்கறுத்து வென்றுபல
பூணவத்தைப் பூண்டுநின்ற புண்ணியர்க்கா ளாகாமல்
வீணவத்தை கொண்டெழுந்திம் மேதினியெ லாமலைந்தேன்
காணவத்தைக் காட்டுமெங்கள் கல்வதது நாயகமே. (21)

துலைவைதத நாவென்னச சூழ்ந்தபல ஞாயநிலைக்
குலைவைத்த பாவியெனை யுள்ளுவந்து காவீரோ
மலைவைத்த தீபமொத்த மௌலல்கௌமி யானவெங்கள்
கலைவைத்த மாமதியே கல்வதது நாயகமே. (22)

பாராரு மூராரும் பாவியெனப் பேசாமற்
சீராரு நுந்துணைததாள் சென்னிமிசை சூடேனோ
ஏராரு நேமநிட்டை யெய்தியற்று மாதவர்சூழ்
காராருங் கையுடையீர் கல்வத்து நாயகமே. (23)

மண்ணொளியும் பொன்னொளியும் வாய்ந்தபல மாமணியின்
றண்ணொளியு நுங்கமலத் தாளொளிக்கோ வொவ்வாவே
விண்ணொளியு முற்றபல வேற்றொளியு மன்பருளக்
கண்ணொளியுங் காண்பருமெங் கலவத்து நாயகமே. (24)

பொற்பகத்தைக் கட்டுணையைப் போற்றுமுயர் நாவகத்தை
யெற்பகத்தை நும்மடிக்கே யீடாக வையேனோ
அற்பகததை யர்ப்பணமென் றற்பகலு மாக்குநர்க்கோர்
கற்பகத்தை யொத்தவெங்கள் கல்வத்து நாயகமே. (25)

வரையேற்ற மென்முலையார் மாயவலைக் குள்ளாகி
விரையேற்ற நுங்கமலமெல்லடிக்கீழ் நில்லாமல்
தரையேற்ற வெம்பாசச் சாகரத்து ளாழுகின்றேனைக்
கரையேற்ற லாகாதோ கல்வத்து நாயகமே. (26)

அடக்கமுடி யாவாசை யற்றொழுக்கப் பேறிருந்து
கிடக்கமுடி யாதுழன்றேன் கீழ்மைதரு மாயையெனும்
நடக்கமுடி யாச்சுமைபு நான்சுமந்தேன் நாடிலிவை
கடக்கமுடி யாதோவெங் கல்வத்து நாயகமே. (27)

போற்றுடி யுற்றபொருள் போதுமென்ற னுட்கமலம்
வீற்றுடி நலலருளை மேவுமனர் தீரீரோ
ஈற்றுடி யுள்ளுதிரு மீஞ்சநகை யொத்திதயங்
காற்றுடி யாகாமற் கல்வத்து நாயகமே. (28)

பொட்டுண்ட வின்னுதலும் பூணுண்ட மென்முலையும்
பட்டுண்ட சிற்றிடையும் பாவையர்பாற் பார்த்துருகித்
தட்டுண்டு தத்தளிக்க தாசனே னும்மருளிற்
கட்டுண்டு நிற்பேனோ கல்வத்து நாயகமே. (29)

அருங்காலி கன்றுவக்கு மன்பினெழுந் தங்களையார்
மருங்காலி யன்றவசை மாறநின்றி கூறீரோ
பொருங்காலி போன்றமடப் புல்லரையுந் தாங்குமொரு
கருங்காலித தூணிகர்த்தீர் கல்வத்து நாயகமே. (30)

தன்மவினை பல்கோடி தட்டாமற் செய்தாலுஞ்
சென்மவினை தீருமுறை தேரும்வகை காணேனே
வன்மவினை பூண்டமுழு மாமடையர்க் குங்கொடிய
கன்மவினை நீத்தவெங்கள் கல்வத்து நாயகமே. (31)

ஊர்மதிக்கப் பேர்மதிக்க வுற்றாருந் தான்மதிக்கப்
பார்மதிக்கப் பொய்புலைகள் பண்ணிநின்ற பாவியேனை
ஆர்மதிக்கப் போகின்றா ரையகோ வன்பினொடுங்
கார்மதிக்கக் காட்சிதருங் கல்வத்து நாயகமே. (32)

துள்ளுண்ட மைம்மறிபோற் சூழ்ந்தெழுந்து தூயவர்தா
மொள்ளுண்ட நின்னருளை மொய்த்துண்டு வாழ்ந்தார்யான்
விள்ளுண்ட மாமுலையார் வெங்காம வெள்ளமுண்டு
கள்ளுண்ட நாய்நிகர்த்தேன் கல்வத்து நாயகமே. (33)

மாணாத வெவ்வினையின் வாய்ப்பட்டு மற்றொன்றும்
பேணாத நாயேனைப் பேயெனென் றெள்ளாமல்
நீணாத போதநவ நீர்மையுற நேர்மைசெய்வீர்
காணாத காட்சிதருங் கல்வத்து நாயகமே. (34)

பார்காத்த வேந்தரெலாம் பண்டினொடு நும்மலர்த்தாட்
சீர்காத்து முவ்வுலகுஞ் சீர்த்துநின்றா ரந்தோயான்
சூர்காத்த வெந்துயரின சூழலிடைப் பட்டலைந்து
கார்காத்த பக்கியொத்தேன் கல்வத்து நாயகமே. (35)

பொல்லாரைக் கூடியவர் போநெறிக்கே போந்தலைந்து
நல்லாரைக் காணவுநான் நாணுகின்றேன் நாய்க்குணத்தேன்
இல்லாரை யுள்ளார்போன் றெள்ளகிலீ ரேற்றருள்வீர்
கல்லாரை யும்புரக்குங் கல்வத்து நாயகமே. (36)

செய்பிழையைத் தாய்பொறுப்பர் சிற்றினத்தோ டேழையர்செ
தேய்பிழையை மேலவர்க ளெண்ணுவரோ வெண்ணருமிந் [ய்
நாய்பிழையை யார்பொறுப்பர் நாடுமும்மை யன்றிமற்றோர்
காய்பிழையைக் காத்தருளுங் கல்வத்து நாயகமே. (37)

சூடுபடும் வல்வினையிற் சூழ்பிணியி லாழ்துயரி
லீடுபடு மேழையெனை யீடேற்ற லாகாதோ
ஆடுபடுங் கைத்திரையி லள்ளிவைத்த செம்பவளக்
காடுபடும் பௌத்திரைவாழ் கல்வத்து நாயகமே. (38)

மைதூக்கிச் சேலொதுக்கு மங்கைமட மாதர்விழிக்
கெய்தூக்கி நெஞ்சழுங்கி யீடழிந்து நின்றவெனைப்
பைதூக்கி யாடரவப் பாழ்நரகிற் புக்காமற்
கைதூக்கி யாளுமெங்கள் கல்வத்து நாயகமே. (39)

மின்னிகர்த்த வாழ்வைநம்பி வேண்டகிலா தும்மலர்த்தாட்
புன்னிகர்த்த சிற்றின்பப் பூவையாதாட் போற்றுகின்றேன்
என்னிகர்த்த பாவியினி யெங்குமிலை யெற்றருள்வீர்
கன்னிகர்த்த பூம்புயத்தீர் கல்வத்து நாயகமே. (40)

விண்பார்த்த நேமியென வெட்டவெளி யுள்ளிருந்து
பண்பார்த்த சுத்தநிலை பற்றிமகிழ் வெய்தாமல்
நண்பார்த்த வன்குடும்ப நாடகத்தி லாடுகின்றேன்
கண்பார்த்துக் காப்பீரோ கல்வத்து நாயகமே. (41)

ஓலெடுத்த பாற்கடலி னுண்டெழுந்த பைம்புயலின்
சாலெடுத்த மாரியெனத் தண்ணளிதந் தாளீரோ
கோலெடுத்த தண்டலையுட் கூண்டெழுந்த முக்கனித்தேன்
காலெடுத்த கிற்கறைவாழ் கல்வத்து நாயகமே. (42)

புண்ணெடுத்த வேல்வலவர் போந்தடர்த்த போர்ப்பதுறில்
மண்ணெடுத்து வீசுநபி மார்க்கநிலை கண்டோரே
பண்ணெடுத்த செந்தமிழ்சேர் பாவெடுத்துப் போற்றுமெனைக்
கண்ணெடுத்துப் பார்த்தருள்வீர் கல்வத்து நாயகமே. (43)

வரைகண்ட பூண்முலையும் வாள்விழியும் நீள்குழலும்
நிரைகண்ட வெண்ணகையும் நேர்ந்தினைவே னுய்வேனோ
திரைகண்ட முத்தமிருள் சீத்தெழுந்தெல செய்கிழக்
கரைகண்ட வாழ்வுடையீர் கல்வத்து நாயகமே. (44)

சுழலிவிடு பஞ்சென்னச் சூழ்கமரிற் பாலென்னத்
தழலிவிடு நெய்யென்னத் தத்தளித்து மாளாதுந்
நிழலிவிடு தூளென்ன நின்றுய்ய நன்றுவந்தேன்
கழலிவிடு தோலாக்கீர் கல்வத்து நாயகமே. (45)

சந்தமுறும் வேதகலை சாத்திரங்க ளத்தனையும்
பந்தமுறக் கற்றுணர்ந்தும் பத்திநெறி நில்லாமற்
சொந்தமுறு மாடுமனை சொத்துசுக மென்றலைந்தேன்
கந்தமுறக் காப்பீரோ கல்வத்து நாயகமே. (46)

விதியருத்து மாயைவழி மேவுமின்ப துன்பமெனும்
பொதியருத்த மாழ்குநரும் போந்திருந்து வாழ்ததுவரேல்
மதியருதது மான்றமன மாண்பருத்து மற்றுமுயர்
கதியருத்து நுங்காட்சி கல்வதது நாயகமே. (47)

போதற்ற வெட்டவெளி போந்திருந்து சும்மாதான்
வாதற்ற பேச்சற்ற வாய்மைநிலை நிலலாமற்
பாதற்ற வெம்மயக்காம் பாழ்ம்பெளவம் வீழ்ந்தநதோ
காதற்ற வூசியொத்தேன் கல்வத்து நாயகமே. (48)

வேல்சோர வோடரிக்கண் மெல்லிநல்லா வேட்கையினம்
பால்சோர நின்றீர்த்த பாசவலைப் பட்டொரீஇ
மேல்சோரக் கைசோர மெய்சோர வாய்சோரக்
கால்சோர நின்றினைந்தேன கலவதது நாயகமே. (49)

உண்ணுவதுந் தூங்குவது மோய்ந்தெழுந்து மற்றையநாட்
கெண்ணுவதும் வேலையென வெண்ணுநர்கா ளாகாமல்
பண்ணுவது நும்பூசை பாடுவது நுங்கீர்த்தி
கண்ணுவது நும்மருளாங் கல்வதது நாயகமே. (50)

சூதிட்ட வைம்புலனுஞ் சூழ்ந்தகுண மாறுமொன்றாய்
வாதிட்டுத் தாழ்த்துமெனை வம்பனெனத் தள்ளாமல
ஏதிட்ட நும்மடிக்கீ ழேய்ந்திருந்து போற்றுமுரை
காதிட்டுக் கேளீரோ கல்வத்து நாயகமே. (51)

பூமாந்தும் வண்டெனநும் பொன்னருளைப் போற்றிநிதந்
தாமாந்தி நும்மலர்த்தாள் சார்ந்திருக்க நாடாமல்
ஏமாந்த சோணகிரி யென்றெவரு மேசவெறுங்
காமாந்த காரமுற்றேன் கல்வத்து நாயகமே. (52)

பாந்தமுற்ற மக்கள்மனை பந்துசுற்ற மென்பவெலாஞ்
சாந்தமுற்ற மோனநிலை தந்தருளற் கில்லையெனச்
சேந்தமுற்ற நும்மலர்த்தாள் சேர்ந்திருக்க நாடுகின்றேன்
காந்தமுற்ற வூசியொத்துக் கல்வத்து நாயகமே. (53)

உள்ளளவு மென்னிதய வுண்மையெலாம் நுஞ்சமுகம்
எள்ளளவும் வஞ்சமின்றி யின்றிசைத்தே னேக்கமறக்
கொள்ளளவு மெய்யருளைக் கூட்டுவிக்கக் கூர்ந்தெழுவீர்
கள்ளளவு நாயேற்குக் கல்வத்து நாயகமே. (54)

சீலமெலா மோருருவாய்ச் சேர்ந்தெழுந்த சீரியர்சீர்
ஞாலமெலாம் போற்றுவது நன்கறிந்தும் நாயடியேன்
தூலமெலாம் பூரிப்பச் சொத்தமனம் போம்வழியே
காலமெலாம் போகின்றேன் கல்வத்து நாயகமே. (55)

வேரிக்கு வாய்ந்தகுழல் மின்னனையார் வெம்மயக்கிற்
பூரிக்கு நெஞ்சினர்க்கும் பொன்னருள்தந் தாண்டீரே
பாரிக்கும் பல்பிணியிற் பாடுபட்டுப் பாறுமகங்
காரிக்கும் பேறருள்வீர் கல்வத்து நாயகமே. (56)

பொய்விட்டார் நெஞ்சகத்திற் போந்திருந்து நேர்ந்தவெலாம்
உய்விட்டுக் காத்துதவி யொள்ளருள்தந் தாண்டீரே
மெய்விட்ட பாவியெனை வேண்டாமல் வேறுதுக்கிக்
கைவிட்டா லென்செய்கேன் கல்வத்து நாயகமே. (57)

வேட்டகத்தி லுண்ணவெகு வேட்கைகொளும் வீணனென
நாட்டகத்திற் சிக்கிமன நாணுகின்றே னுயடியேன்
ஈட்டகத்தி னிசசையற வின்பதுன்ப மற்றவெளிக்
காட்டகத்தி லாட்டுகிற்பீர் கல்வத்து நாயகமே. (58)

வம்பூருந் துன்பவினை வாரிபுக்கு மாதுயரால்
வெம்பூரு மேழையெனை வேண்டியருள் தாரீரோ
அம்பூரும் பண்ணையெலா மார்பவளக கோடிடறிக்
கம்பூருங் கிற்கறைவாழ் கல்வத்து நாயகமே. (59)

சந்தமுற நுந்துணைத்தாள் சார்ந்திருந்த சற்சனரைப்
பந்தமுற வோர்பொழுதும் பற்றிநில்லாப் பாவியெனைத்
தொந்தமுற வாட்கொண்டு துன்பவினைச் சூழ்வகற்றிக்
கந்தமுறக் காத்தருள்வீர் கல்வத்து நாயகமே. (60)

ஓலவட்ட வாருதியு ளூற்றலைந்த வோர்துரும்பாச்
சாலவட்ட மிட்டழுங்குந் தாசனெனை யாளவெனக்
கோலவட்ட வெண்குடைசகீழ்க் கூர்ந்தெழுந்து வாரீரோ
காலவட்ட மாமதியே கல்வத்து நாயகமே. (61)

எள்ளிருக்கு மெண்ணெயென வெவ்வுலகுந் தானாகி
யுள்ளிருச்கு மெய்ப்பொருளை யுள்ளுவந்து நாடாமல்
துள்ளிருச்கு பேழையுளத துன்பொழித்துக் காத்தருள்வீர்
கள்ளிருச்கும் பூம்பததீர் கல்வதது நாயகமே. (62)

சுட்டிவைத்த ஞானகலை தோய்ந்தறிந்து மோய்ந்தமையா
தெட்டிவைத்த நெஞ்சினனா யின்னலுழந் தேங்காமற்
கொட்டிவைத்த வெவ்வினையின் கோளொழிததாட் கொண்
சட்டிவைத்த பொக்கிஷமே கல்வதது நாயகமே. [டருள்வீர்

நிறைதவிர்ந்த நெஞ்சினொடும் நீர்மையிலா வன்கணொடும்
முறைதவிர்ந்த வெவ்வினைகண் மூடனேன் செய்வேனோ
குறைதவிர்ந்த வன்பருளக் கோசனகத் துண்மேவுங்
கறைதவிர்ந்த மாமதியே கல்வத்து நாயகமே. (64)

நோவாக்கா நுஞ்சரணம் நோற்றுவந்தும் நுண்ணறிஞர்
தீவாக்கால் வெந்துபட்ட தீயேனா யாவேனோ
ஏவாக்கா லென்னுணர்கே னென்செய்கே னேவியெனைக்
காவாக்காற் காக்குநரார் கல்வதது நாயகமே. (65)

பற்றாலும் நட்பாலும் பத்திதர நின்றோருக்காற்
சொற்றாலும் நுந்துணைத்தாள் தொல்லைவினை தூராதோ
உற்றாலு மோனமுள மோய்ந்தாலும் வேதகலை
கற்றாலு மாவதெவன் கல்வத்து நாயகமே, (66)

ஊன்மலரு மெவ்வுயிரு மொன்றென்றே யுன்னிமனந்
தான்மலரு மன்பிணிலே தாங்கிநிற்ப தென்னாளோ
வான்மலரு மும்பர்குழாம் வாயார வாழ்த்துமிரு
கான்மலருங் கான்மலரீர் கல்வத்து நாயகமே. (67)

விரைகடந்த பைங்குழல்சேர் மெல்லிநல்லார் வேட்கையெனுந்
திரைகடந்து நும்மடிக்கீழ் சேர்ந்திருப்ப தென்னாளோ
நிரைகடந்த வன்பர்குழாம் நேர்ந்திறைஞ்சச் சூழ்ந்தவருட்
கரைகடந்த வாருதியே கல்வத்து நாயகமே. (68)

சூல்பட்ட மைம்முகில்விண் தோய்வுபட்டுத் தூவுமழைப்
பால்பட்ட பைந்தளிர்போல் பாவியே னுய்வதற்கே
வேல்பட்ட புண்ணினுளம் வெந்துபட்டு மாளாதுங்
கால்பட்ட தூசருள்வீர் கல்வத்து நாயகமே. (69)

வல்லுருக வென்றகொங்கை மங்கைநல்லா ராசைபினுன்
மல்லுருக நெஞ்சுருக மாண்புருக வாடாமற்
சொல்லுருகப் பாடுமுங்கள் தோத்திரத்திற் கென்னிதயக்
கல்லுருக வைப்பீரென் கல்வத்து நாயகமே. (70)

தாப்பிட்டு வேணவெலாந் தந்துதவ வல்லவுமைக்
கூப்பிட்டுங் கேளாத கோளுமொரு கோளாமோ
மாப்பிட்டுச் செய்வினைக்கோர் மாற்றிட்டு வாய்ந்தவருட்
காப்பிட்டுக் காத்தருள்வீர் கல்வத்து நாயகமே. (71)

பொறுத்தாலு மேழுபிழை பொங்கியெழுந் தப்பிழைக்கா
யொறுத்தாலு மன்பினொடு முட்கசிந்தே யோதுபுகழ்
வெறுத்தாலு மெய்மையிலா வீணனென வேசியென்னைக்
கறுத்தாலு மும்மைவிடேன் கல்வத்து நாயகமே. (72)

சூழ்கொண்ட வெம்புவியில் தொல்பொருளிற் பல்தொழிலில்
வீழ்கொண்ட புந்திகெட்டு வீறழிந்து நில்லாமல்
ஆழ்கொண்ட நும்மருளா மாகலிபு ளாடேனோ
காழ்கொண்ட மாமணியே கல்வத்து நாயகமே. (73)

மாணிக்கை யொத்தமொழி மங்கைநல்லார் மாமோகம்
பேணிக்கை கொண்டலைந்த பித்தனையாட் கொண்டாக்கால்
பூணிக்கை வைத்தெழுந்தும் பொன்னடிக்கென் னேழை
காணிக்கை வையேனோ கல்வத்து நாயகமே. [நெஞ்சைக்

விண்ணோட்டங் கொண்ணிலவும் வெங்கதிரும் வேண்டவரும்
ஒண்ணோட்ட மோங்குகழ லுற்றிருந்து வாழாமற்
பெண்ணோட்டங் கொண்டலைந்தெதப் பேறுமற்ற பேயேற்குங்
கண்ணோட்டம் வாய்ப்பதுண்டோ கல்வத்து நாயகமே. (75)

முற்றவரும் பாடுபட்டு முத்தியென்னென் றோராமற்
பற்றவரு மூணுடைக்கே பாவியேன் சாவேனோ
நற்றவரும் ஞானநெறி நாடுநரு நான்மறைநூல்
கற்றவரும் போற்றுமெங்கள் கல்வத்து நாயகமே. (76)

இறங்குவனோ நன்னெறியி லெய்துவனோ வின்புருவம்
பிறங்குவனோ மெய்யருளிற் பேணுவனோ தூயநிலை
யுறங்குவனோ வானந்தத் தோன்றுமின்றி யுளளுலைந்து
கறங்குவனோ யானறியேன் கல்வத்து நாயகமே. (77)

நில்லாத பொய்யுடம்பை நீர்க்குமிழி யென்றுன்னிச்
செல்லாத காசாகச் சிந்தையிடைத் தேர்ந்துமற் றொன்
றில்லாத வேகபர வின்பவெளி தேறவென்றுங்
கல்லாத புல்லானேன் கல்வத்து நாயகமே. (78)

நிதிவைத்த வேட்கையொடு நித்தநித்தம் நெஞ்சுருகிப்
பதிவைத்த வையமெலாம் பாய்ந்தலைந்து வாடாமல்
துதிவைத்த நுஞ்சமுகங் சூழ்ந்திருந்து வாழுமொரு
கதிவைத்த லாகாதோ கல்வதது நாயகமே. (79)

எண்ணுதலு மெண்ணியமுற் றீகுதலு மின்னலறப்
பண்ணுதலும் பாடுதலும் பணபுபெறப் பாவியுளம்
நண்ணுதலு முண்மைநிலை நாடுதலும் ஞானவெளிக்
கண்ணுதலும் நீரானீா கல்வத்து நாயகமே. (80)

மானூருங் கோட்டூரும் வாய்ந்தகடைக் காலூரும்
வேனூருங் கீழூரு மெல்லியர்பால் வேட்பேனோ
சேனூரும் பண்ணைவராற் சென்றுடைத்த முக்கனித்தேன்
கானூருஞ் செம்பிநகர் கல்வத்து நாயகமே. (81

வண்டிருந்த பூவென்ன வந்துவந்தும் பொன்னடிக்கே
தொண்டிருந்த வேழைநெஞ்சஞ் சோர்விருக்கத் தூயவுடற்
கொண்டிருந்த துன்பமுற்றுங் கூர்ந்துறுத்தி நின்றதையோ
கண்டிருந்துங் காவீரோ கல்வத்து நாயகமே. (82)

பொய்யாளு மாதரிடு போகவலைக் குள்ளாகி
மையாளும் வஞ்சநெஞ்ச வன்கணனுப் நில்லாமன்
மெய்யாளு நூதனவி வேகியென வாய்ந்தநுந்தங்
கையாளு மாகேனோ கல்வதது நாயகமே. (83)

முத்துதற்கோ நும்மடியின் மொய்ப்பதற்கோ முற்றுமுமை
நத்துதற்கோ நாடுதற்கோ நண்ணிநின்றார் பல்கோடி
பொததுதற்கோ வாய்மூடிப் போற்றுதற்கோ போந்தவெனைக்
கத்துதறகோ விட்டீரென் கல்வத்து நாயகமே. (84)

பொய்யாத நும்மடியார் புண்ணியமே செய்துசெய்துங்
கொய்யாத தாண்மலர்க்கே கூர்ந்துநின்றாரையோநான்
செய்யாத தீவினையே செய்துசெய்து தீநெறிக்கண்
கைபாத வாறுழன்றேன் கல்வத்து நாயகமே. (85)

படுகளவும் பொய்புலையும் பாழ்ம்பழியுங் கோள்கொலையும்
நெடுகளவும் பற்றிநின்ற நீசர்பெறு நின்மலத்தாள்
முடுகளவும் பார்த்திருந்து மூடனெனை யுட்கனிந்து
கடுகளவும் காக்ககிலீர் கல்வத்து நாயகமே. (86)

வஞ்சமலர் நெஞ்சமொடு வல்வழக்கும் பொய்யுரையும்
விஞ்சமலர் வாய்கொண்டு விண்டுரைத்தேன் வெய்யேனுன்
குஞ்சமலர் நுங்குடைக்கீழ் கூர்ந்திருந்து நேர்ந்தபதக்
கஞ்சமலர் கொள்வேனோ கல்வத்து நாயகமே. (87)

மருத்துவந்து நோயகற்று வார்போலுந் தாட்கமலம்
பெருத்துவந்து தீதகற்றிப் பேறுபெற்றார் பல்கோடி
திருததுவந்த வத்துறைக்கே சிந்தைசெலுத் தாதலுததேன்
கருத்துவந்து காப்பீரெங் கல்வத்து நாயகமே. (88)

நிலங்கரைவி யாபார நீணிதிய முற்றுமுற்றும்
புலங்கரைவி யாவெளிய புல்லனுக்கு மோக்சமுண்டோ
மலங்கரைவி னேசமிலா வப்பர்பவ வாருதிக்கோர்
சலங்கரைவி ளக்கமொத்த கல்வத்து நாயகமே. (89)

உள்ளலப்பு மாசைமுற்று முற்றுவந்து நம்படிக்கே
கொள்ளலப்ப வைத்தவென்னைக் கூர்ந்தெழுந்து காருமையா
புள்ளலம்புந் தண்டலைசூழ் பொற்கமல வாவியெலாங்
கள்ளலம்புங் கிழைநகா கல்வத்து நாயகமே. (90)

மெய்ம்மாறு பொய்ப்பனத்தார் வேட்கைவலைக் குள்ளாகிச்
செய்ம்மாறு கண்டறியாத தீயனென்னை யாள்வீரே
உய்ம்மாறு சீவரெலா முற்றெழுந்து பெய்ம்முகிற்கோர்
கைம்மாறு காண்பதுண்டோ கல்வத்து நாயகமே. (91)

உள்ளமனஞ் சுத்தநிலை யுற்றிருப்ப வுத்தமர்தா
மெள்ளமனம் விட்டீர்க்கும் வேசியர்க்கா ளாவாரோ
பள்ளமனப் பாய்புனல்போற் பற்றகலாப் பாவிபெற்ற
கள்ளமனந் துள்ளுதையோ கல்வத்து நாயகமே. (92)

துளிப்பருத்து நெய்க்கூந்தற் றோகைநல்லார் சொற்சுவைக்கே
இளிப்பருத்து நெஞ்சினனு யீடழிந்து வாடாமற்
புளிப்பருத்து மஞ்ஞானப் போக்கொழித்துப் பொங்குசுகக்
களிப்பருத்து மாறருள்வீர் கல்வத்து நாயகமே. (93)

இளைப்பகற்றிப் பன்னுளு மேய்ந்தபல நோயகற்றித்
திளைப்பகற்றி வேசையர்தஞ் சிந்தனையுந் தானகற்றி
முளைப்பகற்றி வெம்பாச முத்திநிலை கண்டிடவென்
களைப்பகற்றி யாளுமெங்கள் கல்வத்து நாயகமே. (94)

உய்வந்த முத்தர்குழா முற்றபர சிற்சபையின்
மெய்வந்த சான்றுரைத்து மேவுபுகழ் பெற்றெழுந்து
நைவந்த தீதகற்றி நாடுசுத்த சேதனமாய்க்
கைவந்த மெய்க்குருவே கல்வத்து நாயகமே. (95)

வான்கண்ட வொள்ளொளிபோல் மானிலத்து மோங்கியைத்தும்
ஊன்கண்ட காத்திரத்தோ டுள்ளுயிரு மானீரே
யான்கண்ட மெய்க்குருவே யின்னருளை நல்லுணர்வே
கான்கண்ட கற்பகமே கல்வத்து நாயகமே. (96)

அந்தரத்தி லப்புவியி லாயுல சீவர்தம்மைத்
தந்தாதரி லாக்கவல்ல சற்புருடக் குருமாரே
எந்தரத்தி லுள்ளசில வேண்டுகளு மின்னலறக்
கந்தரத்திற் காத்தருள்வீர் கல்வதது நாயகமே. (97)

பாட்டாற்றி வந்தபல பத்தர்மனப் பான்மைமுற்றுங்
கேட்டாற்றிக் காக்கவல்ல கேண்மைமிக்க மேலோரே
தேட்டாற்றி வந்தவெனைச் சேர்த்தருள்வீர் தீயபவக்
காட்டாற்றில் வீழ்த்தாமற் கல்வதது நாயகமே. (98)

வான்காணப் பாதலமு மண்டலமு மெண்டிசையுந்
தான்காண வாய்ந்தபுகழ் தந்துதவ வந்தோரே
நான்காண முப்பொழுதும் நாடிவந்து நும்மலர்த்தாட்
கான்காணக் காட்டுகிற்பீர் கல்வத்து நாயகமே. (99)

கூட்டுவிப்பீர் சன்மார்க்கங் கொள்ளுவிப்பீ ரன்பொழுக்கம்
ஊட்டுவிப்பீர் பொன்னருளை யோங்குவிப்பீ ரின்பநலம்
சூட்டுவிப்பீர் நும்மலர்ததாள் தோற்றுவிப்பீர் ஞானநெறி
காட்டுவிப்பீர் முத்திநிலை கல்வத்து நாயகமே. (100)

அடைத்தேற வைம்பொறியு மைப்புலனு மைங்கோசந்
துடைத்தேற வைந்தவத்தை தூர்த்தேறத் தூயதவம்
படைத்தேற வுண்மைநிலைப் பற்றேறப் பாவிநான்
கடைத்தேற வைப்பீரெங் கல்வத்து நாயகமே. (101)

---

**கல்வத்து நாயகம்,**

இன்னிசைப் பாமாலை,

*முற்றிற்று.*

பிஸ்மில்லாஹி.

# கல்வத்து மாலை.

ஆக்கியோர்,

காஜா, ஹசன் அலிப்புலவர்.

மேலப்பாளையம்.

பதித்தது,

எம். எஸ். எம். பிரஸ், நாகர்கோவில்.

# கல்வத்து மாலை.

## காப்பு.

வெண்பா.

பூரணமாய்ப் பாவிலங்கப் போந்தகல்வத் தீசரெனுங்
காரணராம் ஸெய்யிதப்துல் காதிறுமேற் — றூரணியிற்
செல்வத்துட் செல்வமுறச் சிற்பரனே யான்பாடும்
கலவத்து மாலைக்குன் காப்பு.

கண்ணிகள்.

அல்ஹம்து லில்லாஹி யலனும மோதியபின்
கல்வத்து நாயகமேல் கல்வத்து மாலைசொல்வேன். (1)

குன்னென்ற வோருரையாற் குல்லாம் படைப்புகளை
யுன்னென் றமைத்தறப்பை யுண்மையுட னேபுகழ்வேன். (2)

எல்லாப் படைப்புகட்கு மேற்றமாய் நம்மிறசூ
லுல்லா தமைவகுத்த வுத்தமனை யானபுகழ்வேன். (3)

ஆல நபிக்குமவ ரால்களஸ் ஹாபவர்க்குஞ்
சீலசல வாத்துஸலாம் செப்பிப் புகழ்ந்திடுவேன். (4)

ஆதி நபியிறசூ லன்பார்நால் யார்களையு
மோதிமன துண்மகிழ்ந்தே யுவப்பாய்ப் புகழ்வேனே. (5)

பாத்திமத்தைப் போற்றியவர் பாலகர்ஹ ஸன்ஹுஸைனை
யேத்திமெத்தப் பண்புறவே யெப்போதும் நான்புகழ்வேன்.()

வேதமுறை யையுணர்ந்தே மேன்மதுஹ பையமைத்த
போதவிமாம் நால்வரையும் போற்றிப் பணிவேனே. (7)

நேராக வெல்லவர்க்கும் நீதிமறை யைப்பொழியுங்
காராக வந்தஇமாம் கஸ்ஸாலி யைப்புகழ்வேன். (8)

தாட்சமொடு காவளைந்த ஜய்லானி யிற்பிறந்தே
மோட்சந் தருமகிமை முஹ்யித்தீ னைப்புகழ்வேன். (9)

மாதிரமெலாம்புகழு மாதவத்த புல்ஹஸனிஷ்
ஷாதிலியி மாம்பதத்தைச் சஙகையுட னேபுகழ்வேன். (10)

சீர்சிறந்த நன்முஹ்யித் தீனிபுனி அறபியெனும்
பீர்அக்ப ராண்டவரைப் பெட்பாய்ப் புகழ்வேனே. (11)

காஷானி யென்பவரைக் கைசரியை யாபிஇயை
ஆசான் ஜியலியையு மாசையுற வேபுகழ்வேன். (12)

உல்லாப மேயிலக வுள்ளதைபு ணர்த்துவிக்கும்
சல்லாபஞ் செய்தஇமாம் ஷஃறானி யைப்புகழ்வேன். (13)

பீரான பீரரசாய்ப் பேர்பெறவே வந்துதித்த
மீரான்சா ஹிபொலியை மேன்மேலும் நான்புகழ்வேன். (14)

ஸட்சதக்கத் துல்லாவின் தந்தைசுலை மானொலியி
னடசரணத் தாமரையை யன்பாய்ப் புகழ்வேனே. (15)

துங்கந் தரும்சதக்கத் துல்லாவை யும்மவர்கள்
சங்கமெனு முன்பின் சகோதரரை யும்புகழ்வேன். (16)

தற்கலையின் மெய்ஞ்ஞான சாகரமாய்ப் பொங்கிநிற்குஞ்
சற்குணத்தர் பீர்முஹம்மத் சாஹிபொலி யைப்புகழ்வேன். ()

காப்பாற்று மப்பனெனக் கல்வத்துநா யகம்புகழும்
பார்ப்பார்ப சிறொலியைப் பாசமுட னேதுதிப்பேன். (18)

கண்ணூரா நன்னகரிற் கண்ணும்பு காரிதனை
விண்ணோர் புகழ்குதுபை வீறுடனே யான்புகழ்வேன். (19)

செங்கைதருஞ் சற்குருவாஞ் செய்மல்கல்வத் தாண்டகையின்
சங்கைபுறும் பேரர்தைக்கா சாஹிபொலி யைப்புகழ்வேன். ()

தேர்ந்ததிரு ஞானமெலாஞ் செந்தமிழாற் பாடிப்பதி
சார்ந்தநற்கு ணங்குடிமஸ் தான்சாஹி பைபபுகழ்வேன். (21)

ஷெய்குஅப்துல் காதிறென்ற ஷெய்குநயி னுப்புலவர்
பொய்கைமலர்ப் பாதமதைப் போற்றிப் புகழ்வேனே. (22)

தாஜிணைந்த ஷெய்காஞ் சலாஹுத்தின் பேரரென்பீர்
ஹாஜிஷெய்கு செய்யிதுமு ஹம்மதொலி யைப்புகழ்வேன். ()

சாற்றுகல்வத் தாண்டகையின் தந்தையாரா மறிவாளர்
போற்றுயாப் பிள்ளையாலிம் பொன்னடியை யான்புகழ்வேன்.

அண்ணலவ் வியாக்க ளடங்கலையு மெண்ணிதயத்
தெண்ணலனு கூலமுற வின்புறவே நான்புகழ்வேன். (25)

இங்குரைத்த வொலிமார்க ளெழிலாந்து ஆப்பொருட்டாற்
சங்கைகல்வத் தாண்டகையின்சரித்திரத்திற்சற்றுரைப்பேன்.

பாடுபுக ழுற்றவபூ பக்ருசித்தீ கின்குலத்திற்
காடுமுறித தாரெனும்பேர் காட்டுகிளை மீதிலுள்ளோர். (27)

பதினோர் தலைமுறையாய்ப் பண்பொலிமார் நாயகன்பாற்
றுதியாற்றவம்புரிந்து தோன்றியவிவ் வாண்டகைகாண். (28)

ஆர்மிகுந்த கல்வத்தொலிக் கனந்தநாட் காதியிலே
பீர்முஹம்ம தாண்டகைபாற் பெட்பொலிச தக்கத்துல்லாஹ்.

சென்றுகவி ஞானமதின் றீர்ப்பறிவா ராருலகி
லென்றதற்குங் கோததிரததி லேபுதிப்பா ரென்றுரைத்த.(30)

மாராயம் போலே மஃரிபத்தின் மாரிபெய்யுங்
காராய்ப் பிறந்துதித்த கல்வத்துடை நாயகர்காண். (31)

காரைக்கால் மஸ்தானலி கிழக்கரை சாஹிபிடம்
பேரைமறக் காமலுங்கள் பேர்விளங்கக் கண்குளிரும். (32)

பிள்ளை பிறக்குமென்ற பேதமற்ற வாக்கதுபோற்
கொள்ளையறி வோடுதித்த கோலமணி யானவர்காண். (33)

தந்தைமாப் பிள்ளையாலிம் ஷாஹுல்ஹமீ தாண்டகைபாற்
சிந்தைமகிழ்ந் தேபுகழ்ந்து தேடினார் வெகுமதியா. (34)

உம்பே ரெனக்கொருபேச யுண்டாக வாமருள்வீ
ரும்பே ரவர்க்கிடவென் றுரைத்தபடி வந்தவர்காண். (35)

இவ்விதங்க ளார்தவங்க ளெவ்வளவோ வுட்டிரண்டு
செவ்விதங்க ளாயுதித்த செய்யிதப்துல் காதிறுகாண். (36)

ஆம்ஹிஜ்ரி யாயிரத்தோ டிருநூற் றறுபத்தினு
லாம்வருடத் தில்றஜபி லம்மதிமு தற்புதனில். (37)

கல்வத்தொலி கீழக்கரைக் கல்விநக ரிற்பிறவிச்
செல்வத்துடன் சுந்தரமாய்ச் சேமமாய்ப் பிறந்தனர்காண். (38)

பௌத்திரமா ணிக்கபதி பாக்கியகீ ழக்கரையிற்
கௌத்துவ மணிநிகராய்க் கல்வத்தொலி தாம்பிறந்தார். (39)

கிற்கருப் பட்டணமாங் கீழக்கரை யானதிலே
நற்கருணையார் கல்வத்து நாயகம்பி றந்தனர்காண். (40)

கேலிக்கரை யென்றுரைக்குங் கீழக்கரை நன்னகரிற்
சாலிக்கரை யுட்பொருளைச் சாற்றுமொலி தாம்பிறந்தார். (41)

அணுத்துகை மங்கலமா மன்புறுங்கீ ழக்கரையிற்
றுணுக்கம்வெளி யிற்சிறக்குந் துய்யமொலி தாம்பிறந்தார் (42)

செம்பிநா டென்றுரைக்குஞ் சீர்நகர்கீ ழக்கரையில்
தம்பிநா மஞ்சிறக்குஞ் சாஹிபொலி தாம்பிறந்தார். (43)

பதிநினைத் ததுமுடித்தான் பட்டணங்கீ ழக்கரையிற்
றுதிநிலைத்த நெஞ்சமுள்ள துங்கவொலி தாம்பிறந்தார். (44)

இந்தவெழு நாமங்களி னின்பப்பொரு ளாயுலகில்
வந்தடிமை சிந்தையிலே மையலுற்ற மெய்யவர்காண். (45)

ஆதியினி னைக்கமிறு ஆத்துல்மூமி னீனென்றுரு
சோதியா யென்முன்வந்த தூயகல்வத் தாண்டகைகாண். (46)

தேற்றுமறி விற்சிறந்த செய்யிதுமு ஹம்மதெனத்
தோற்றுமாப் பிள்ளையாலிந் தோன்றலென வானவர்காண். (47)

மாறு திரவனைத்தும் வல்லவிறை யைவணங்கும்
சாருவும் மாதமக்குஞ் சந்ததியாய் வந்தவர்காண். (48)

ஜெகத்தில்வந்த நாண்முதலாய்ச் சிறுபாவ மானதையு
மகத்திலுமே யெண்ணுமை லாதியருள் பெற்றிருக்கும். (49)

வெள்ளையக மதுமெலப்பை வெற்றியாலி மானவர்க்குப்
பிள்ளைபிள்ளை யாயுதித்த பேரமிரனும பீரோலிகாண். (50)

சய்யிதுல்க லாயிக்கைத்தான் தைக்காகல் வததிற்கண்டு
ஐயுஹல்அ லீமுஹதகிஸ் அன்னீயென் றருளப்பெற்ற. (51)

செய்யிதப்துல காதிறெனச் செப்புந்தைக்கா சாஹிபுக்குத்
துய்யமகள் பெற்றவர்பேர் சொலும்பேர ரானவர்காண். (52)

பூவி லுதித்தவன்று பூவினர்க்கும் வானவர்க்குங்
கோவிலுள்ள ஹூறுகட்குங் கொண்டாட்ட மெத்தவுண்டாம்

கொண்டாட்டத் தோடுதித்த குழந்தையாம நாயகத்தைக்
கண்டாட்டத தோடெடுத்துக் கண்ணில்வைத்து முத்தமிட்டு.

தாய்தந்தை தம்மிடத்தில் தைக்காசா ஹிபவர்கள்
சேய்தமக் கொருபெயரைச் செப்பவேணு மென்றருளி. (55)

ஜின்னுலகில் நபிபெயரும் ஷெய்குதஸ்தக் கீர்பெயரு
மின்னுமீ ருன்பெயரு மேற்றமிகு மென்பெயரும். (56)

தந்தையன்னை யெண்ணினதுஞ் சய்யிதப்துல் காதிறென்றே
விந்தையந்த நாமமதை மேன்மையெனச் சூட்டினர்காண். (57)

சூட்டிக் களிப்புற்றே சுகமாகப் பாலுணவை
யூட்டிக்கல்வத் தாண்டகையை யுரித்தாய் வளர்த்தனர்காண்.

வளர்ந்துவரு நாயகத்தை வந்துகண்ட வொருபெரியோர்
கிளர்ந்தகுது பாமெனவே கிடைத்தகன வாலறிந்து. (59)

காரணமென் றோதியிரு கைகால் பிடித்துமுத்திப்
பூரணம ஹப்பத்துடன் போற்றுகல்வத் தாண்டகைகாண். (60)

இந்தவிதக் காரணங்க ளெவ்வளவோ சூழ்ந்திலங்க
வந்தகல்வத் தாண்டகைதாம் வளர்ந்தேறு நாளதிலே. (61)

ஏழாம் பிராயமதி லிறையோன் கலாமதுவைப்
பாழா மறதியின்றிப் பாடமிட்டுத் தேர்ந்தனர்காண். (62)

எல்லாக் கலைகளையு மெளிதாகக் கற்றுணர்ந்து
நல்லோர் நெறியொழுகி நாயன்பாற் காதல்கொண்டார். (63)

ஊணைக் குறைததா றுறக்கமதை யும்வெறுத்தா
ராணைப் படிநடந்தே யாரணத்தை மிகவுணர்ந்தார். (64)

அலரெல்லாந் தூங்கா தருந்தவங்கள் செய்துமன
வல்லலைநி னைந்தழுதே யாதியுட னேசமுற்றார். (65)

காடும் பதியுமொன்றாய்க் கண்டுமிகத் தாகமுடன்
தேடுமுனி வோர்களுடைத் தெரிசனமுந் தானடைந்தார். (66)

மன்னுஞ்சுவை ஞானந்தரு மாதவநற் பிரபையொளி
மின்னுஞ்செய்யி தப்பாஸு மௌலானு வென்பவர்கள். (67)

இந்திலுல மாஉகுரு வென்றவரையு நான்காணே
ணிந்தஆலி மைத்தவிர வென்றுமிவர் கல்வத்துற்றால். (68)

தொண்டுபுரிந் தேயிவாற் றுங்கமுறு மேவினனவே
விண்டுபுகழ்ந் தேற்றிவந்த மேன்மைபெற்ற நாயகர்காண். (69)

செய்யிது எஹியாபாற் றீட்சைதந் தருளுமெனச்
செய்யஇஹ் யாஉலூமுத் தீனெனுங்கி தாபதனை, (70)

கொடுத்தே அனஎஹியா குதுஇஹ்யா வென்றுரைக்க
எடுத்துப்பலன் பெற்றுயர்ந்த வின்பப் பதவியர்காண். (71)

பெற்றோர் விரும்பியதாற் பெண்ணில்மெத்த வுத்தமியாங்
கற்றோர் குலத்துதிதத கன்னிசெய்யித் மீராவை. (72)

மங்களமு ழக்கமுடன் மாண்பாய் மணமுடித்துத்
திங்க ணபிநடையாந் தீன்வழியி லேநடத்தி. (73)

திட்சைகொடுத் தேயவரைத் தேற்றிமிகப் பண்படுத்திக்
காட்சிபெறச் செய்தருளுங் காரணநங் நாயகர்காண். (74)

இவ்விதமா யிருவோரு மியற்றும் ஜெபதபங்கள்
செவ்வியுரு வாய்த்திரண்டு செல்வியாயி ஷாபிறந்தார். (75)

மாசிலா வுத்தமரா முஹம்மதுச தக்கத்துல்லா
ஆசிபெறு மாயிஷதகை யன்பாய் மணமுடித்தும். (76)

பொன்மதிபோற் பெற்றெடுத்த பௌத்திரிஜெய் லானிதம்மை
யென்பிரான்பேத்திமாற்றியென் றுரைத்துப்போற்றினர்காண்.

நல்வழியிற் றேடுபொரு ளையனரு ளூட்டுவதால்
வல்லகுரு நாயகர்தாம் வர்த்தகத்தை விருத்திசெய்தார். (78)

சீமான் றனத்துடனே ஜெயமா யிருக்கையிலுங்
கோமா னபிதவத்தின் கொள்கையுட னேநடந்தார். (79)

திறமிகுந்த நாயகரைச் சிவஞானி நாகையிலே
பிறவிச்செல்வம் பிறவிச்செல்வம் பிறவிச்செல்வ மென்றுரைத்
[து.
பேருடனே பேறும் பிரபெனவே சொல்லும்புவிச்
சீருடனே செல்வங்களுஞ் சேர்ந்தவெங்க ளையகர்காண். (81)

தேற்றுமப்துல் வஹ்ஹாபுஷ் ஷஃறானி யென்றவிமாம்
தோற்றும்படி யாகவந்து தூயகுணத் தால்நிறைந்த. (82)

லத்தாயி புல்மினனில் லாயிகா முட்பொருளை
யூத்பா யெடுத்துரைக்க விலாபம்பெற்ற பாக்கியர்காண். (83)

வேதப் புதையல்களை விளக்குசில ஆயத்திற்குப்
போதப்பொரு ளாந்தப்ஸீர் பொற்புடனே கோவைசெய்தே.

பூவிலுல மாக்களெல்லாம் போற்றிப்பணிந் தாவல்கொள்ளும்
நாவிலுயர் வாயுதித்த நாகரீகத் தேசிகர்காண். (85)

தேவையுற வேஉலூமுத் தீனெனுங்கி தாபதனைக்
கோவைசெய்யவேண்டுமென்றுகுற்றமறதொடங்கினர்காண்.

தொடங்கிச்சில பாகங்களைத் தொடரா பெழுதிடுங்காற்
றடங்கலுற்றுக் கல்வத்துற்றார் தனியோன்ற னுத்தரவால். (87)

அற்புதமெ லாமறிந்தே யம்புவியின் வாழ்க்கையெலாம்
புற்புதமென் றேயகற்றிப் புகுந்தகல்வத் தாண்டகைதாம். (88)

செல்வத்தரை வாழ்வையெல்லாஞ் சிந்தைசிந்தி யாதவண்ணம்
கல்வத்தினி லேயமர்ந்து ஹக்குடைய காட்சிபெற்றார். (89)

ஷாதிலியி மாமவர்கள் சங்கைஹிஸ் புல்பஹ்றை
ஓதியருட் செய்தபின்ன ருவப்பாம்வி லாயத்துற்றார். (90)

காட்சியுட னிவ்விதமாய்க் கல்வத்தி லிருக்கையிலே
மாட்சியுள்ள நாயகனால் வந்ததோ ருத்தரவை. (91)

கேட்டவுட னச்சங் கிளம்பிஜது போயெழுந்து
தேட்டமுடன் தந்தையிடஞ் சென்றுகைபி டித்திறையோன்.

ஈஸாவென் றாக்குவதா யியம்புகிறா னான்றகுமோ
வீஸனிட மென்றனக்கா யிரந்துகவி செப்பிடுமின். (93)

என்றவுடன் கவியுரைத்தே யில்லத்தார் யாவருமே
யன்றுதொழு தாதியிட மன்பாய்து ஆவிரந்தார். (94)

பின்னா லொருவருக்குப் பிள்ளையொன்றி றந்ததனாற்
றன்னாற் சகிக்கவொண்ணாத தன்மையறிந் தம்மகவை. (95)

இன்றெழுப்ப வேண்டுமென்க வேகமினாலி தான்கபுறிற்
சென்றெழுப்ப நாடிடவுஞ் செய்யிதப்துல் காதிறுவே. (96)

அம்புவித னிற்படைத்தே யழித்தகிலநீர் நாடியதை
யும்முடைய வுத்தரவா லுற்றெழுப்பச் செய்திடுவேன். (97)

இப்படியென் றாலுலகி லீஸாவி லேசிலர்சொல்
எப்படியோ வப்படியே யுந்தமையு மியம்பிடுவார். (98)

என்றுரைத்த நாயன்சொல்லு மிதற்கியைந்த தந்தைசொல்லு
நன்றுறவே வச்செயலை நாடாது நீங்கினர்காண். (99)

இவ்விதமஸ் தூபா யிருந்துகல்வத் தானபின்பு
திவ்வியநற் றறவறத்தைச் செய்வதென்று காடேழுந்தார். ()

அப்போது காட்டிடத்தி லன்பர்க்குற்ற தூணினைவாற்
றப்பாது கைநீட்டிச் சதக்கத்துல்லா தூள்கொடுத்தார். (101)

பௌததிரர்தந் தூண்முகக்கப் பண்போடு திரும்புமினித்
தௌத்தியம தற்கில்லை தான்காடேன் றோதினர்காண். (102)

அப்பாற் றிரும்பிவந்தே யந்தரங்க மாந்தவத்தி
லெப்போதும் றப்புடைய யேவற்படி கல்வத்துற்றார். (103)

தைக்கா வளைவிலொரு சர்ப்பம்வரக் கண்டவரு
மிக்கான வச்சமுற்றே விசத்தொடுத தாரரவம். (104)

புகழாரும் கல்வத்துட் புகவுமதை னைத்தொடர
நகராது நாயகர்தாம் நன்மலக்கென் றோதினர்காண். (105)

விருப்புடனே கல்வததிலே வீற்றிருக்கும் போதொருநா
ணெருப்புபல பாம்புபுலி நின்றெரிந்து கொந்தளிக்க. (106)

வந்தே பசிறேலிதா மகவே யுமக்குவரு
மெந்தவித வசசத்திலு மெள்ளளவு மஞ்சாதீர். (107)

என்றுரைக்க நெஞ்சிலச்ச மில்லாமற் றீரமுற்றுச்
சென்றுமிக வுன்னதமாஞ் சிரியசன் னிதியடைந்த. (108)

ஹாதியரு ளாலெனக்கு ஹகீகத்திற்ப சிறேலிதாஞ்
சாதியாந் தந்தையென்றே சாற்றியசா யுச்சியர்காண். (109)

பேராய்முன் னுகையிலே பிறவிச்செல்வ மென்றவர்தாம்
நேராய்க் கிலுறெனவே நிச்சயமா யறிந்தனர்காண். (110)

எத்தனையோ நடவைகளி லிவர்பால் கிலுறுசொன்ன
அததனையி ரகசியமு மறிந்துயர்நத ஆரிபுகாண். (111)

வாரா மறிவுளதீ வானுல்ஹக் காயிகுலே
நாரமப்துல் கனிய்புங் நாபுல்ஸி யிமாமவர்கள். (112)

நன்றுறவின் நாயகர்க்கு நாமமிபு னுல்கௌமி
யென்றுபட்டஞ் சூட்டிவைத்த வேந்தல்குரு மாமணிகாண்.

மௌலானா றூமிஜலால மதுனவியிற் சைக்கினையாய்
மௌலல்கௌமி யென்றுபெயர் வைத்திருக்கு முத்திவர்காண்.

விஸ்தார ஞானகவி விள்ளுங் குணங்குடியார்
மஸ்தான்சா ஹிபுரைத்த வாக்கனைத்து மேமெனது. (115)

நாவா யிருந்தவர்க ணவின்றதன்றி வேறுவிதப்
பாவா யுரைத்ததில்லை பாருமென்ற பாக்கியர்காண். (116)

ஷெய்குநயி னுப்புலவர் செய்புள்களி லேயெனக்கு
வாகுளது ஆவிரந்து வழுத்தினரென் றோதினாகாண். (117)

பார்ப்பார் பசீறுலிதாம் பண்பானந் தக்களிப்பிற்
கூர்ப்பாயென் சங்கதியைக் கூறினரென் றோதினர்காண்.(118)

மாதவஞ்சே ரறிவுறும வாக்கிவுன்னு ஜூமதிலே
சேதனவி ரகசியமாம் ஸிர்றுபது ரில்ஹுபஷீ. (119)

என்றுரைத்த சொல்லேலா வெனைக்குறித்த தென்றியம்பி
நன்றுறவே காட்டிவைத்த நாதரொலி நாயகர்காண். (120)

சீருறு ஸலாதுமஷீ ஷிய்யாவி லப்துஸ்ஸலா
மாருறஹி ஜாபுல்அஃலை மென்றதுநா மென்றவர்காண். (121)

மன்னகவாஸ் ஸூகள்த மாதவக வாஸ்ஸூல்கவாஸ்
முன்னிற் குழந்தைகள்போல் முற்றுமவர் சொல்விளங்கார். ()

உமறுல் கிறுகரியு மன்னவரு ளொருவரென
நமதுஷெய்குல் அக்பர் நவின்றதுமென் றன்னையென்றார்.(123)

எப்படியு மிவர்களும மென்றெண்ணுஞ் சீடருக்கு
மொப்பக்கஷ் பாலறிந்தே யோதும்பைத்தைக் காட்டினர்காண்.

(மன்வாப கல்ஹக்கபீ ஹூக்மின் வபீஅமலி
பசின்னஹூ உமறுல் பாறூகு பிஸ்ஸமனி.)

ஆதனம காமுனிவ ரகஸ்தியருஞ் சொன்னசுத்த
சேதனமெ னும்பெயருஞ் செப்பப்பட்ட ஷெய்கிவர்காண். ()

தோற்றுஞ் சுலோகங்களுஞ் சோபனமாய் முன்பெரியோர்
போற்று மொழிமதிப்பும் பூண்டுதித்த பூரணர்காண். (126)

பீர்முஹம்மத் சாஹிபெனும் பேர்சிறந்த நாயகத்தைச்
சிர்முகந்த நேர்முஹியித தீனிபுனி அறபியென்றே. (127)

பேரிணைப்புஞ் ஞானங்களின் பெட்பான கோவைகளி
னேரிணைப்புங் காட்டிவைத்த நேர்மையறி வுற்றவர்காண். (128)

ஆமைலக் கூதலிணி யன்புபெற வேகூண்ட
சீலவொலி மார்சபையிற் றிருமுஹ்யித் தீனொலியும். (129)

தகும்பீர் முஹம்மதுவுந் தாங்கேட் டுளங்களிக்கப்
புகழுமது னவியைவிடப் புரூஸு தனைப் போற்றினர்காண். ()

ஒளியாங் கிரிகையத னுட்புகுந்த வெற்பினத்தி
னிளியாங் துகளிதென வென்றியம்பும் போதவையில். (131)

தேசாங் கிரிகையதைச் சீரியகஸ் ஸாலியிமாம்
பாசாங் தெளிவறிவாய்ப் பார்த்தறிந்த காட்சியர்காண். (132)

பண்மையுள்ள மேலாகமாம் பற்தானி யத்ததிலே
வண்மையுட னுயகந்தாம் வாருமென்ற ஊைத்திடவே. (133)

அங்கொளிவி லங்குமெல்க ளனந்தங்கோ டாகோடி
பொங்குமொளிக் காட்சிகண்ட போதகமெய்ப் பூரணர்காண்.

ஐயுஹல்முஸ்த் தலிஉபீ அம்ரியென்ற பைத்ததிலே
துய்யவொலி தம்மியல்பைச் சொல்லியறி வித்தவர்காண். (135)

வானவரு நிததநித்தம் வந்துவந்து ஸப்புஸப்பாய்த்
தீனவருக் கரசரென்றே சேவைசெய்புஞ் செய்யிதுகாண். ()

முண்டகம லர்ப்பதத்தார் முஹம்மதுர்ற சூல்நபியைக்
கண்டகம கிழ்ச்சியுறுங் கண்ணியம்நி றைந்தவர்காண். (137)

நன்னபியை யோர்நொடியு நான்றெரிசி யாதிருந்தா
லென்னைமுஸ்லி மானவனா யெண்ணேனென் றோதினர்காண்.

அன்பரிடம் வல்லாஹு யும்முடனுன் பேசவில்லை
யின்பமா யிறையுடனே யில்லாம லென்றனர்காண். (139)

மஹ்முதெ னுந்தலத்தின் மன்னு னெழுப்பிவைத்து
வஹ்தத்துப் பதவிபெற்ற வள்ளல்நபி யைத்தொடர்ந்தே. ()

அல்லாஹ்வை யப்பதத்தி லாகிதமெதரி சிததவொலி
யுல்லா வெனும்காத்த மெங்களுடை நாயகர்காண். (141)

சன்னிதிநற் கந்தங்களிற் சார்ந்தசிர் று கேட்டறிய
உன்னதமெய்ப் பதவியுடை யுத்தமர்க ளாசைகொண்டு. (142)

காதம்மு தாவில்குலூம் காரணரா மிவ்வொலியி
னுதமொழி கேட்கவென நாடிதுஆக் கேட்டனர்காண். (143)

யாஸீனைக் கத்முவென்றே யாவர்களுஞ் சொல்லும்ஸிர்றை
நாஸில்காத்த மேயறிவார் நன்றாக வென்றனர்காண். (144)

கத்முயாஸீன் ஸிர்றறிந்த காத்தமான நாயகர்தாம்
கத்முவென்ற சொல்லதனைக் கர்த்தாவி னுத்தரவால். (145)

செல்வமல வுல்அம்லா செப்புமழ லைமொழியாய்
நல்லமலக் கூத்துலகில் நான்கேட்டே னென்றவர்காண். (146)

மணவினெண்ண மாகவொலி மார்கள்வந்தா ரென்சமுகங்
குணமுறுமு ரீதுபெறக் குத்துபுமார் கூறிடவே. (147)

முடிதரித்த வொலியரசர் முஹியித்தீனும் ஷாதலியுங்
கொடிதரித்த தம்முரீதிற் கூடும்படி வந்துரைத்தார். (148)

அப்படியே யவருரைக்க அல்லாவி னுத்தரவு
மெப்படியோ வப்படியே யேற்றிடுவே னென்றனர்காண். (149)

மன்கருணை பெருகும்வள்ளல் மன்னர்முஹ்யித் தீன்முன்வந்து
என்கலிபா வாகவிரு மென்றுரைக்க வவர்களிடம். (150)

தாங்களாய் நானுகுந் தன்மையே யல்லாம
லோங்குகலி பாவாக வுற்றிலே னென்றனர்காண். (151)

ஷெய்கெவரோ ஷெய்குக்கென்று சிந்தையினி லனைத்தவர்பால்
ஷெய்கீறு வல்லாவென்ற செய்தியது கூறுகிறதுகாண். (152)

கைதாங்கும் பைஅத்திலா ஹியாவைப் பெற்றுத்தரி
கைதகான்த ரீகத்திலா ஹியரவென் றோதினர்காண். (153)

சொந்தமா யோர்விருதைச் சூட்டியெமக் கருள்புரிவா
யெந்தமக்கு மன்பினர்க்கு மேகனே யென்றிரங்கே. (154)

வாரிதாய் வந்தமகி மைவிருதை யோதியவர்
பேரிதா யுயர்பதவி பெறுவரென்ற நாயகர்காண். (155)

ஆதியே யெங்களுக்கு மவ்விருதை யனுதினமு
மோதியே முத்திபெற வுன்னுதவி தந்தருள்வாய். (156)

சீதேவி யானவரின் சிந்தைகளி லல்லாது
மூதேவி யானவர்கட்கென் முஹப்பததுறு தென்றனர்காண். ()

ஆனாலு மதோமென்ற ஞுபுளிலு மீட்சியுற்றுப்
போனாலு முண்டெனவே பொருளுரைத்த புண்ணியர்காண்.

என்னை ஹப்பு வைத்தவர்க ளென்றுஞ்சீ தேவியென்றே
சொன்னபடி காப்பாற்றுந் தோற்றமுள்ள ரட்சகர்காண். (159)

அன்பர்வந்த போதவர்க்கோ ரைம்பதாம் வருடங்கட்கு
முன்புகண்ட சொப்பனத்தை மொழிந்தவரின் தந்தைசொன்ன.

தாற்பரிய மும்மறிந்து சாற்றியவர் பின்னொருநாள்
நேர்கனவில் வந்துரைதத யெவ்ப தேசதனதயும். (161)

மறந்துவிட்ட தென்னவென்றே வற்புறுத்திக்கைபையெல்லாந்
திறந்தருளிச் சிந்தைதனைத் தேற்றிவைக்கும் ஷெய்கிவர்காண்.

உள்ளத்தி னுண்மறைந்த வூசாட்ட மத்தனையு
முள்ளபடி யேயறிந்து முதத்தரம ளிப்பவர்காண். (163)

சென்னையுல மாவொருவர் சிந்தைநொந்து மையலுற
முன்னர்வந்து தோன்றியவர் மோகமுற்ற வையமற. (164)

நாடுமா யத்துணர்த்த நாயகர்மீ தாசைபொங்கிப்
பாடும்படி கேட்டிருந்த பட்சமுற்றீ ரிவர்காண். (165)

அயலூரி லுளசீட ரானவரை ஹிம்மத்தினால்
மயலா வரவழைத்தே மாராய மோதியபின். (166)

ஷெய்குல்அக்ப ராண்டவர்கள் செய்தறா ஹில்குதுஸில்
ஷெய்கொருவ ரிவ்விதமே செய்வித்ததைக் காட்டினர்காண்.

காணவென வோர்மனிதர் கால்நடையாய் வந்தவர்க்குத்
தோணும்வழி தான்தவறிச் சோலைகடற் காடதிலே. (168)

அந்திபட்ட போதகத்து ளச்சமிக வச்சமயம்
நொந்திதயம் வாடிவழி நோக்கியரு ளென்றிரக்க. (169)

அன்றவர்முன் றீபத்துட னாகிச்சில தூரத்தின்முன்
சென்றுநகர் காட்டிவைத்துச் செல்லும்ஹாதி யானவர்காண்.

நாயகர்ச கோதரர்க்கும் நன்மருக ருக்குமிடை
நாயகன தூழின்படி நடந்தவிவ காரமொன்றில். (171)

ஞாயஞ்சொல்ல நாயகரை ஞாயாதி பதியழைக்க
நாயனுடை யுத்தரவை நான்பார்க்க வேண்டுமென்றார். (172)

அப்பா லிவர்க்கிறையி னன்பான வுத்தரவு
மிப்பாரில் வந்ததுந்தம் மில்லைவிட்டு வெளியில்வந்தார். (173)

முன்னவனின் கட்டளைபோன் மொய்தவத்தார் முதுகுளத்தூர்
மன்னவனின் கச்சேரிக்கு வாகாய்க் கிளம்பிடவே. (174)

சற்சனங்கள் கூடினர்கள் சந்தோஷ மாய்த்திரண்டு
நற்சிவிகை யைத்தொடர்ந்தார் நாதரொலி யேறியுற்றார். (175)

போம்பொழுதி லவ்வழியிற் போந்தநக ரானதெல்லாந்
தேம்பொலியும் பந்தலிட்டுச் செம்மலைய மைத்ததுகாண். ()

இவ்விதத்தி லாண்டகையோ டெத்தனையோ வாயிரம்பேர்
செவ்விதத்து டன்றொடர்ந்தே சேர்ந்தார் முதுகுளத்தூர். ()

சேர்ந்தவுட னதிகாரி திகிலடைந்து கேட்காது
நேர்ந்தவழக் கைநிறுத்தி நீக்கிவிட்டா ரக்கணமே. (178)

மீண்டுவரும் போதிலருண் மேவுமிதம் பாடனகர்
பூண்டுதம தன்பரகம் புகத்தீபம் நூர்ந்ததுகாண். (179)

அப்போ திருளதிலே யங்குடையோர் தீபம்பற்ற
ஹூப்பாய் நெருப்பினதைக் கூடியெங்குந் தேடடவே. (180)

தூரணராங் கல்வத்தொலி காட்டியநுன் முகமதிலே
பூரணமாய்ச் சந்திரன்போற் பொன்னொளியுங் கண்டனர்காண்.

கண்டவிந்த வல்லலத்துல் கத்ராமிவ் வாண்டிலென்றே
விண்டுதவஞ் செய்யச்சொன்ன மேன்மைபெற்ற தேசிகர்காண்.

ஈசன் புறத்திருந்தே யிறங்குமுசீ பத்துகளை
நேசமுறு வோரிடத்தும் நேர்மைபெற வூரிடத்தும். (183)

காணும் பலபடைப்பு களிலுமணு காதபடி
தாணுவரு ளாகநின்று தாங்கிநின்ற நாயகர்காண். (184)

ஆவல்கொண்ட பேரையெல்லா மாதரவுற் றிருபதியிற்
காவல்புரிந் தாண்டருளுங் கௌதுசம தானிவர்காண். (185)

பங்கமிகு மிவ்வுலகப் பற்றறவே யீடேற்றும்
வங்கமென வந்துதித்த மௌலல்கௌமி யானவர்காண். (186)

பாபமெனுங் கங்குல் பறந்தொழிய வேசுவர்க்கத்
தீபமென வந்துதித்த திவ்வியசி காமணிகாண். (187)

வஞ்சகமெ லாம்விலக வடனுமெசால்லித் தீனூழ்ங்கில்
நெஞ்சகத்தைப் பண்படுத்தும் நேர்மையுள்ள தேசிகர்காண்.

சீரியஹி தாயத்தொளி தீனவர்மேல் வீசிநிற்கும்
பீரிவரென் றேபெரியார் பின்றொடரு சற்குருகாண். (189)

அச்சமறக் கல்வத்தி லாண்டுமுப்ப தோடுசொச்சம்
பச்சமுற வுற்றிருந்த பண்பையறிபவர் சொல்லவல்லார். (190)

ஆர்ஹிஜ்ரி யாயிரத்தோ டையறுப தையாறு
மோர்வருட மாதம்ஷவ்வா லோங்குமிரு பதிரண்டில். (191)

புதனு ளிரவதிலே போற்றுகல்வத துள்ளினுயர்
சதமாய்வ பாததாகிச் சமாதியுற்றார் தைக்காவில். (192)

மெய்யவன ருண்மழையை மெத்தவவர் மேற்சொரிவா
னுய்யவவர் மண்டாட்ட முற்றவெங்கட் கீந்தருள்வான். (193)

நெஞ்சிடைந்து நொந்தழுதார் நேயகுரு மறைந்ததற்பின்
கஞ்சி புரத்தொருவர் காட்சியைஅத தின்மையினால். (194)

அப்போது வந்தவர்முன் னருளியிரு முறைதீட்சை
யெப்போதுஞ் சீவந்தனு யிருக்கின்றே னென்றனர்காண். ()

சென்றபின்னுஞ் செல்லுமுன்னுஞ் சேனைகா ரணங்களுண்டு
நன்றறவே தெரிந்தெடுத்து நானறிந்து கொண்டமட்டில். ()

றப்பருளைக் கொண்டடியேன் றப்பென்ற விலக்கமதி
லொப்புரவோ டிம்மாலை யோதயன தாசைகொண்டு. (197)

கல்வத்து நாயகர்மேல் கல்வத்து மாலையென்று
செல்வத் திறையருளாற் செப்பிமுடித் தேனிதற்கு. (198)

கூடுந் தியாகமதைக் கொடுப்பவர்க்கு மிக்கவியைப்
பாடும் படிபுரிந்த பாங்கருக்கு நேசமுடன். (199)

பாடித் துதித்தவர்க்கும் பல்பிழைகள் திருத்துநர்க்குங்
கூடியே கேட்பவர்க்குங் குதாவருண்மி கும்ஆமீன். (200)

அல்லா நபிதமக்கு மால்சஹ்பு மெங்கள்குரு
மௌலல்கௌமி யானவர்க்கும் வாய்ந்தசல வாத்துசலாம் (201)

கவியுரைத்த ஹஸனலிக்குங் கருதியுரை செய்தவர்க்கும்
புவிவான் படைத்தவனே புண்ணியலி காவருள்வாய். (202)

# கல்வத்து மாலே.

## முற்றிற்று.

